1991 செப்டம்பர் 14] *[டாக்டர் தே. குமாரதாஸ்]*

குறைந்த பட்சம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி 6 மாத காலமாக மிகவும் பட்டினிப் போரில் வாழக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அரசு தனியாக அவர்கள் மேல் இரக்கம் கொண்டு, ஒரு வேளை இதற்கு 2, 3 கோடி ரூபாய் செலவாகக் கூடும், இருந்தாலும் அதை நீங்கள் பொருட்படுத்தாமல், புரட்சித் தலைவர் அவர்கள் இருந்த காலத்தில் கூட மீனவர்களுக்காக நல்லபல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்கள். அதை நீங்களும் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு, இந்தச் செலவை பார்க்காமல், ஒரு சிறிய தூண்டில் வளைவை ஏற்படுத்தித் தரவேண்டும். கேரளாவிலே நறைய பகுதிகளிலே இப்படி அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே மீன்களும் அதிகமாகக் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைப் போல நீங்களும் அந்தத் தொகுதியை தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, அந்தத் தூண்டில் வளைவை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கவனத்தோடு இந்த அரசு பரிசீலித்து அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31. திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

<u>பெரியார் அணை மேம்பாட்டுத் திட்டம்.</u>

31—

*266—<u>திருமதி இரா. பாண்டியம்மாள்:</u>

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பெரியார் அணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 58 கிராமப் புதிய கால்வாய்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலக வங்கி ஒப்புதலளித்த இணைப்புக் கால்வாய்த் திட்டம் ரூ. 25 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப் பட்டதால் உசிலம்பட்டியில் 58 கிராம கால்வாய்த் திட்டம் அரசால் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி ஒரு பின்தங்கிய தொகுதி. உசிலம்பட்டி தொகுதி மக்கள் 40 ஆண்டுக்காலமாக ஒரே கட்சிக்கு வாக்களித்த மக்கள் இன்றைய தினம் எங்களுடைய அன்புத் தலைவி புரட்சித் தலைவியின்மேல் உள்ள பாசத்தினாலும் அன்பினாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னைத் தேர்ந்தெடுத்து இருக்கின்றார்கள். 58 கிராமக் கால்வாய்த் திட்டம் என்பது 10 ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசனமும், 3 ஆயிரம் குடும்பத்தினர் வாழ வகையுள்ள திட்டமாகும். எனவே, எங்களுடைய அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க உலக வங்கி ஒப்புதல் அளித்த இணைப்புக் கால்வாய்த் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்பட்டது? அந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, 58 கண்மாய்களுக்கான கால்வாய் வெட்டும் திட்டம் பற்றி மட்டும் தான். இணைப்புக் கால்வாய் பற்றிய விவரங்களைப் பற்றி கேள்வி கேட்பது என்றால் அதற்கு ஒரு தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால், இந்த 58 கண்மாய்கள் வெட்டுகின்ற பிரச்சனை பற்றி சுமார் 200 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டி உள்ளது. ஏறத்தாழ மலையினைக் குடைந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு 27 கிலோ மீட்டர் கால்வாய் வெட்டப்பட வேண்டியிருக்கிறது. அந்த காஸ்ட் பெனிஃபிஷியரி ரேஷியோ என்று பார்க்கின்ற நேரத்திலே மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலேதான் ஏறத்தாழ இன்றைய மதிப்பீடுபடி இருபது கோடிக்கு மேலே அந்தத் திட்டத்திற்குச் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, இவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதி 58 கிராமங்களும் மேலே இருக்கின்ற பகுதி என்று சொல்லுகின்ற அப்பர் லிமிட்டிலே இருக்கின்ற காரணத்தினாலே, கால்வாயை வெட்டிச் செல்வதற்கு என்று சாத்தியக் கூறு இல்லாத நிலையில் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆகவே, இப்பொழுது இந்தத் திட்டத்தைப் பரிசீலனையில் எடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமா என்பதை அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

1991 செப்டம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பு சர்வே செய்யப்பட்டது. அப்படி தண்ணீர் போகும்பொழுது என்னுடைய தொகுதியிலுள்ள பகுதி வழியாகத்தான் போகிறது, ஆகவே அதிகப்படியான தண்ணீர் வரக்கூடிய காலங்களிலாகிலும் இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து இதற்கு உயிரூட்டக்கூடிய ஒரு நிலைமையை அமைச்சரவர்கள் உருவாக்கிக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே, தற்போது இருக்கின்ற நிலைமைகளைத் தெரிவித்தேன். எதிர்காலத்தில், நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, தாய் உள்ளம் கொண்ட இந்த அரசு மிகுந்த கவனத்தோடு பரிசீலித்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு, கே, தவசி

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய இதயம் கொள்ளை கொண்ட தலைவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அந்த 58 கிராமக் கால்வாய்த் திட்டம், தாய் உள்ளம் கொண்ட தலைவி' கடந்த 27 ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே ஆளுங்கட்சிக்கு வாக்களிக்காதவர்கள் இப்பொழுது வாக்களித்து நமது புரட்சித் தலைவியினுடைய பெருமையைச் சேகரித்திருக்கின்றார்கள். எனவே, இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டில் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ள வேண்டுமாய் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்ள ஆவலுடன் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு, ''தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் தரப்படும்'' என்று சொல்லுகின்ற அளவிற்குச் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற அரசு. ஆகவே, உங்களுடைய கோரிக்கையை ஏற்று அடுத்த ஆண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, கே. ஆர். இராமசாமி அம்பலம், இது 58 கிராமப் புதிய கால்வாய்த் திட்டத்தைப் பற்றிய கேள்வி.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பெரியார் அணை மேம்

[1991 செப்டம்பர் 14

பாட்டுத் திட்டத்திலிருந்து தேவர் திருமகனார் மாவட்டத்திற்கு வாய்க்கால்கள் புதிதாக அமைக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, உசிலம்பட்டி பகுதியில் அமைப்பதைப் பற்றியது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே சொல்லி விட்டார்கள். ஆகவே, இதற்கு என்று உறுப்பினர் தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி வெ. பன்னீர் செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பெரியார் அணை மேம்பாட்டுத் திட்டம் என்ற தலைப்பிலே இந்தக் கேள்வி வருகிறது. எனவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. உசிலம்பட்டியில் 58 கிராமப் புதிய கால்வாய்த் திட்டத்தின் கீழ் கேள்வி வருகிறது.

திரு. தேனி பன்னீர்செல்வம் : ஆமாம், கால்வாய்த் திட்டம்தான். பெரியார் அணை மேம்பாட்டுத் திட்டம் என்ற வகையிலே 18 ஆம் கால்வாய்த் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டம், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சென்றமுறை போடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது முதல் கோரிக்கையாக இதை நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதி தந்திருந்தார்கள். இந்த 18 ஆம் கால்வாய்த் திட்டம் தற்போது நடவடிக்கையில் இருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியாற்றைப் பொறுத்த வரைக்கும் பல்வேறு கால்வாய்த் திட்டங்கள் இருக்கின்றன. இங்கே கேட்கப்பட்ட கேள்வி 58 கால்வாய்த் திட்டம்தான். இருந்தாலும் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி நம்முடைய உறுப்பினரவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஏதாவது ஒப்புதலைப் பெற்று விடலாமா என்று நினைக்கிறார்கள். ஆகவே, அதற்கு என்று அவர் தனியாகக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா எண் 32, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

வால்பாறை அரசு ஊழியர் குடியிருப்பு.

32—

*1041—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வால்பாறை தொகுதியில் மலைப்பகுதியில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்துத் திட்டங்களையும் சிந்தாமல் சிதறாமல் சீர்படுத்தி, நெறிப்படுத்தி மக்களாட்சியின் நல்லாட்சியை

முற்பகல் 10-15

நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இதை அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும். காரணம், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலத்திலிருந்து, வால்பாறை தொகுதி நமது அரசுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது என்றும், மேலும் வால்பாறையை தாலுகாவாக அமைக்கப்பட்டுள்ளது என்றும், அங்கு மழைக் காலங்களும் குளிர் காலங்களும் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அரசு ஊழியர்களுக்கு வழங்குவதற்கு வீடுகள் இல்லாத காரணத்தினாலும், தனியாரிடமிருந்து வாடகைக்கு வீடுகள் இல்லாதக் காரணத்தினாலும், தனியார் நிறுவனங்கள் வீடுகள் கட்டுவதற்கு அங்கு வசதிகள் இல்லை என்கிற காரணத்தினாலும், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : கவனிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.